# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 158/மா/2022**

**நாள் : 22.11.2022**

திரு. P. வேலு,
சிவதாபுரம் போஸ்ட், சேலம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சேலம் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் போஸ்ட், மெய்யந்தெரு, 268/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. வேலு என்பவரின் **14.09.2022** நாளிட்ட மனு **15.09.2022** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 158/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் போஸ்ட், மெய்யந்தெரு, **268/1**, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. வேலு என்பவரின் முறையீட்டு மனுவில்,

"நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். தற்போது சேலம் மாநகராட்சியில் முறைப்படி விண்ணப்பித்து டெபாசிட் உட்பட அனைத்து கட்டணங்களையும் செலுத்தி குடிநீர் இணைப்பு பெற்றுள்ளேன். 160 அடி தூரமுள்ள எனது இணைப்பிற்கு பாதை பராமரிப்பு கட்டணம் ரூ.4375 மேற்பார்வை கட்டணம் ரூ.3746 ஆக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. 2007ல் மேற்படி கட்டணங்கள் ரூ.324 இதில் முக்கிய விஷயம் யாதெனில் தார் சாலையை வெட்டி இணைப்பு கொடுத்தால் மட்டுமே பாதை பராமரிப்பு கட்டணம் விதிக்க வேண்டும். என் இணைப்புக்கு மண் பாதை மட்டுமே 2007-க்கு பிறகு மேற்படி கட்டணங்கள் எந்த தேதியில் உயர்த்தப்பட்டது என்பதற்கு மாநகராட்சியிடம் பதில் இல்லை.

இதில் பிட்டர் முருகவேல் விதிகள் மீறி தன்னிச்சையாக லஞ்சம் கொடுத்தால், குறைவாகவும், கொடுக்கவில்லையெனில் அதிகமாகவும் கட்டணம் நிர்ணயம் செய்கிறார். 2007க்கு பிறகான குடிநீர் இணைப்புகள் ஆய்வு செய்தால் பிட்டர் முருகவேல் இதில் பெருமளவு முறைகேடு செய்துள்ளது தெரியவரும். ஆகையால் பிட்டர் முருகவேல் மீது அரசு பணியாளர்கள் நடத்தை விதிமுறைகள் சட்டம் 1973ன் படியும், IPC Sec. 161, 162,

163, 164-ன் படியும் உரிய விசாரணை செய்து அவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்வதுடன் அவரது ஓய்வூதிய பலன்கள் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, சேலம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 7.11.2022 நாளிட்ட அறிக்கையில்,**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட, கோட்டம் எண்-22ல் கதவு எண்.268/1/, சின்னகுட்டி தெரு, மெய்யந்தெரு பகுதியில் திரு.P.வேலு த/பெ.பொன்னுசாமி, என்பவர் வீட்டு உபயோகத்திற்காக குடிநீர் இணைப்பு கோரியவாறு, சூரமங்கலம் வார்டு அலுவலக கருவூலத்தில் சலான் எண்.N/A.0003075 நாள்:26.05.2022ல் ரூ.110/-னை செலுத்தி 26.08.2022ல் விண்ணப்பம் செய்துள்ளதின் பேரில், இவ்வலுவலக உதவி பொறியாளர் அவர்களால் மேற்படி இடத்தினை நேராய்வு செய்து, பரிந்துரை செய்துள்ளதின் அடிப்படையிலும், சேலம் மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.492, நாள்:28.03.2022ல் புதிய குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சாலை சீரமைப்புக் கட்டணம் மற்றும் மேற்பார்வைக் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயம் செய்து, அனுமதிக்கப்பட்டுள்ள தொகைகளின் அடிப்படையிலும், தனியார் வீட்டு உபயோக குடிநீர் வழங்கக் கோரும் இடத்திற்கு தகுந்தாற்போல், டெபாசிட் தொகை ரூ.7500/- சாலை பராமரிப்புக் கட்டணம் 48 மீட்டருக்கு ரூ.4375/- மற்றும் மேற்பார்வையாளர் கட்டணம் ரூ.3,746/- ஆகியவற்றை சூரமங்கலம் வார்டு அலுவலகம் கருவூலத்தில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதின் பேரில், மனுதாரரால், சூரமங்கலம் வார்டு அலுவலகம் கருவூலம் பற்றுச்சீட்டு எண்.049/01/01/22-23/0003201 நாள்:02.09.2022ம் தேதி செலுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மனுதாரரின் சொத்து வரி விதிப்பு எண்.049/022/900546 உள்ள வீட்டிற்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க 30.09.2022ம் தேதி உத்தரவு வழங்கப்பட்டதின் பேரில், மனுதாரரின் வீட்டிற்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரர் திரு. P. வேலு த/பெ.பொன்னுசாமி, சிவதாபுரம், சேலம் -- 307 என்பவர், மேற்படி புதிய குடிநீர் இணைப்பு தொடர்பாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகைகள் குறித்த விவரம் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் விவரங்கள் கோரியதில், இவ்வலுவலகம் வாயிலாக வழங்கப்பட்ட தகவல்களை பெற்றுக்கொண்டதாகவும், அதன்பேரில் மேல்நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் எனவும் கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, மேற்படி மனுதாரர் தனது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் அலுவலகத்தில் கூடுதலான தொகை ஏதும் வசூல் செய்யப்படவில்லையெனவும், மாநகராட்சி மன்றத்தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகைகளையே வசூல் செய்யப்பட்டது எனவும், மாநகராட்சி விதிகளின்படியே புதிய வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மேலும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் விதி மீறல்கள் ஏதும் இல்லை என்பதால், மாநகராட்சியால் புதிய குடிநீர் இணைப்பு வழங்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை கருணையுடன் பரிசீலித்து மேற்படி புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் எனவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 15.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 15.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

**15.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் சேலம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் சின்னகுட்டி தெருவில் வசிக்கும் திரு. பி. வேலு என்பவர் தனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வேண்டி மாநகராட்சிக்கு விண்ணப்பம் செய்த நிலையில், அவரது வீடு மண் ரோட்டில் அமைந்துள்ளதால் அதற்கான cutting charge ஆக ரூபாய் 4375/–ம் மேற்பார்வையாளர் கட்டணமாக ரூபாய் 3746/–ம் மேற்கண்ட விண்ணப்பதாரரிடம் பெறப்பட்டு அத்தொகை சூரமங்கலம் வார்டு அலுவலக கருவூலத்தில் செலுத்தப்பட்டு அவரது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. மேற்கண்ட குடிநீர் இணைப்பு மற்றும் கட்டணம் தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனுதாரரால் தகவல் கோரப்பட்டது. மேற்கண்ட தகவல் மாநகராட்சியால் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்ட அலுவலகத்திற்கு அனுப்பியுள்ள தனது 26.10.2022 நாளிட்ட கடிதத்தில் "தான் மேற்கண்ட பராமரிப்புக் கட்டணம் தொடர்பாக தேவையான தகவலை பெற்றுக்கொண்டதாகவும் எனவே, அவரது மனுவின் மீது எவ்வித மேல் நடவடிக்கையும் தொடரவேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்" என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சேலம் மாநகராட்சி ஆணையரின் 7.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தன்னுடைய மனுவில் தனது குடிநீர் இணைப்பிற்கு தார் சாலையை வெட்டி இணைப்பு கொடுத்தால் மட்டுமே பாதை பராமரிப்பு கட்டணம் விதிக்க வேண்டும் எனவும் ஆனால் தன்னுடைய குடிநீர் இணைப்பு மண்பாதை மட்டுமே உள்ளது எனவும், குடிநீர் கட்டணங்கள் எப்போது உயர்த்தப்பட்டது என்பது தெரியவில்லை எனவும் அதனால் தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார்.

மனுதாரர் மனு மற்றும் சேலம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

சேலம் மாநகராட்சி சூரமங்கலம்; சின்னகுட்டி தெருவில் வசிக்கும் திரு. பி. வேலு என்பவர் தனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு கோரி அளித்த விண்ணப்பத்தின் பேரில், அவரது வீடு மண் ரோட்டில் அமைந்துள்ளதால், உதவி பொறியாளர் அவர்களால் மேற்படி இடத்தினை நேராய்வு செய்து பரிந்துரை, செய்துள்ளதின் அடிப்படையிலும், சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.492, நாள்:28.03.2022ன் அடிப்படையிலும், Cutting Charge ஆக ரூ.4375/-மேற்பார்வையாளர் கட்டணமாக ரூ.3746/-ம் நிர்ணயம் செய்து மனுதாரரிடமிருந்து குடிநீர் இணைப்பிற்கான கட்டணம் வசூலிக்கப்பட்டது என ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. மேலும், மனுதாரர் குடிநீர் இணைப்பு தொடர்பாக மாநகராட்சிக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அளித்ததன் பேரில், அதற்கான பதில் மனுதாரர் பெற்றுக்கொண்டு, அதன்பேரில் மேல் நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் என 26.10.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதையும் அறிய முடிகிறது. மேலும் மனுதாரர் இம்முறைமன்ற அழைப்பாணை ஏற்று 15.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

மனுதாரரின் மனு மற்றும், சேலம் மாநகராட்சியின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் சின்னகுட்டி தெருவில் வசிக்கும் திரு. பி. வேலு என்பவரின் குடிநீர் இணைப்பிற்கான கட்டணங்கள், உதவி பொறியாளர் மனுதாரரின் இடத்தினை நேராய்வு செய்து

பரிந்துரை செய்துள்ளதின் அடிப்படையிலும், சேலம் மாநகராட்சியின் மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர் விவரங்கள் பெற்றுக்கொண்டு அதன் பேரில் மேல் நடவடிக்கை ஏதும் தொடரவேண்டாம் என தெரிவித்ததின் அடிப்படையில், இம்முறையீட்டு மனு மீது மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லையென்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. P. வேலு,
S/o. பொன்னுசாமி,
268/1, மெய்யந்தெரு,
சிவதாபுரம் போஸ்ட், சேலம் - 636 307.
2. ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
நாவலர் நெடுஞ்செழியன் சாலை,
சேலம் - 636 001.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.